சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.11.11.2025.
OS.No.748/2018
PW 1( மறு அழைப்பு) : ஷியாமளா தேவி (வயது 62 ) க/பெ.இளங்கோவன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
இ.ம.எண்.12/2025 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் வா.சா.1 மீண்டும்அழைத்து கு.வி -க்கு அனுமதிக்கப்படுகிறார்.

**1,2,3,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

9 முதல் 17 பிரதிவாதிகள் சிறுமருதூரில் உள்ள 2 வது பிரதிவாதி ஸ்ரீதேவியிடம் மனை கிரயமாக வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2 ஆம் பிரதிவாதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு மேற்படி கிரயத்தை வாங்கியுள்ளார் என்பதால்அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரத்தை அவருக்கு எதிராக தனியாக கேட்டுள்ளேனா என்றால் அவருக்கு எதிராக தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் அதற்கான பரிகாரம் கேட்டுள்ளேன். நான் கூறுவது போல், எந்த ஒரு பரிகாரமும் அதுபோல் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

எனக்கு உறையூரில் பஞ்சவர்ணம் சுவாமி கோவில், சன்னதி தெருவில் வீடு உள்ளதா என்றால் எனது வீட்டுகாரரின் வீடு உள்ளது. மேற்படி வீட்டை 27.11.2008 ல் கிரயம் வாங்கியுள்ளோமா என்றால் கிரயம் வாங்கியுள்ளோம் எந்த தேதி என்று சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் 27.11.2008 ஆம் தேதியிட்ட கிரய பத்திரம் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது எனது வீட்டுக்காரரின் சொத்து. ( எதிர்தரப்பில் மேற்படி கிரய பத்திர சொத்து குறித்து வழக்கிடை பொருளாக இல்லை என்பதால் அதனை குறியீடு செய்வதில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது, அதற்குட்பட்டு குறியீடு வழக்கின் இறுதியில் தீர்வு காணப்படும் ) மேற்படி 27.11.2008 ஆம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் கணிணி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புத்தூர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வீடு கட்டுவதற்காக எனது பெயரில் கடன் வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம்.என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ஆவணங்களை வைப்பீடு செய்ததற்கான பதிவு பத்திரம்

என்றால் சரிதான். 19.05.2017 ல் வாங்கிய பதிவு ஆவண வைப்பீடு பத்திரம் நான் பதிவு செய்த ஆவணம் தான் அது **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( எதிர்தரப்பில் வழக்கு சொத்திற்கும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்ற ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு, வழக்கின் இறுதியில் தீர்வு காணப்படும் )

மேற்படி பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் ஷியாமளா இளங்கோவன் என்று தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 10.08.2014 ஆம் தேதியன்று ரூ.30,00,000/- பணமும் 10 பவுன் நகையும் 1,2 பிரதிவாதிகளிடம் நான் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக ஷியாமளா இளங்கோவன் என்று கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது சாட்சியத்தில் வேண்டுமென்றே அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது அம்மாவின் சொத்துக்களில் எனக்கு 3 ல் 1 பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது கணவருக்கு செந்தில்குமார் என்ற நண்பர் இருக்கிறாரா என்றால் அவ்வாறு யாரும் இல்லை. செந்தில்குமார் எனது கணவரின் நண்பர் என்றும் அவர் 10.08.2014 ஆம் தேதி ரசீது ஏற்படும்போது இருந்தார் என்றும் அவர் ரசீது பற்றி உண்மையான சாட்சியம் அளிப்பார் என்பதால் அவரை பொறுத்து தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் ரூ.30,00,000/- பணமும் 10 பவுன் நகையும் எனது பங்கிற்காக பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதால், வழக்கில் நான் கேட்டுள்ள பாகம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed/

ஷியாமளாதேவி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.11 19:18:20 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி